


XVC 80

# வ.உ.சி.யும்
# பரலி சு. நெல்லையப்பரும்





செ.திவான்

# வ.உ.சி.யும்
# பரலி சு. நெல்லையப்பரும்

வரலாற்று ஆய்வாளர்

**செ. திவான்** எம்.ஏ., எம்.ஃபில்


வெளியீடு

**வ.உ.சி. இலக்கியப்பேரவை**

1/1, மதுரை ரோடு,
திருநெல்வேலி சந்திப்பு - 627 001.

# காணிக்கை

நெல்லை சந்திப்பு வ.உ.சி.இலக்கியப் பேரவை அமைப்பின்
முன்னோடி அண்ணன் திரு. இல. இராமகிருஷ்ணன் அவர்களின்
தந்தையார் பெரியவர் **எம்.இலட்சுமணன்** அவர்களுக்கு



★ 5.9.1999 வ.உ.சி. பிறந்த தின இலவச வெளியீடு

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

# எண்ண அலைகள்

அகிலம் போற்றும் அரசியல் தலைவராகவும், அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் புகழ் வாய்ந்த புனிதராகவும் வாழ்ந்திட்ட தேசியத் திருவிளக்கு, தென்தமிழகம் தந்த தவப்புதல்வர் வ.உ.சி.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வலிமை வாய்ந்த குரலை எழுப்பிய வ.உ.சி.யின் மங்காப்புகழ் அழியாது நிலை நிற்க வேண்டுமென்கிற ஆதங்கத்தில் வ.உ.சி.யின் அச்சில் வராத 'அழகும் ஆரோக்கியமும்' என்ற கட்டுரைகளைத் தேடி எடுத்துப் பதிப்பித்தேன். அது போன்றே 'துன்பத்தின் கற்பனை' என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டேன்.

1927 இல் சேலம் ஜில்லாவில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மகாநாட்டில், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி ஆற்றிய உரையினை 'சேலம் அரசியல் மகாநாட்டில் எனது பெருஞ்சொல்' என்று எட்டணா விலையில் வ.உ.சி வெளியிட்ட நூலை 'வ.உ.சி யின் அரசியல் பெருஞ்சொல் ' எனும் நூலாக மறுபதிப்புச் செய்தேன்.

ஈரோட்டுப் பகலவன், சுயமரியாதை இயக்கப் பிதா, தந்தை ஈ.வெ.ரா அவர்களுக்கும் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிக்கும் இடையே நிலவிய நட்பை, உறவை விவரித்திடும் வண்ணம் 'வ.உ.சியும் பெரியாரும்' எனும் நூலாக எழுதி வெளியிட்டேன்.

தேசியத்தின் மூச்சுக் காற்றாய், வெள்ளை இருட்டை விரட்டத்தோன்றிய சுதந்திர வீரர்களின் தாரக மந்திரமாய்த் திகழ்ந்த வ.உ.சி அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்களது புகழினைப் பாடிய முன்னோடிகளின் பாடல்களை 'வ.உ.சி புகழ் பாடிய முன்னோடிகள்' எனும் நூலாகத் தொகுத்து வெளியிட்டேன்.

தத்துவத் தமிழுக்கு காலம் வழங்கிய முத்திரை மோதிரமான வ.உ.சி அவர்களின் உற்ற துணைவராக உடனிருந்து காரியங்களை ஆற்றியவர் பரலி சு. நெல்லையப்பர்.

உலகமும், ஊராரும் அந்த உத்தமரை பெரிதும் மறந்து விட்ட நிலையில், பெரியவரின் புகழினை உலகறியச் செய்யும் விதத்தில் பரலி சு. நெல்லையப்பரின் வாழ்க்கைக் குறிப்பை இந்த நூலில் தந்துள்ளேன்.

ஏனெனில் வ.உ.சி யின் வாழ்க்கைச் சரிதத்தை 1940 களிலேயே தந்த பெருமைக்குரியவர் பரலி சு. நெல்லையப்பர். அறுபது ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய **வ.உ.சி சரித்திரத்தையும்** இந்த நூலில் காண இருக்கிறீர்கள்.

இதனை வெளியிட முன் வந்துள்ள நெல்லை சந்திப்பு வ.உ.சி இலக்கியப் பேரவைக்கும், அண்ணன் திரு. இல. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், அண்ணன்மார்கள் ஐ.சாமுவேல், S.N. சுப்பையா, D.V.தங்கசாமி, பாளை மு. அருணாசலம், நல்ல முறையில் இந்நூலை அச்சிட்டுத் தந்த அண்ணன் கனி ஆப்செட் அதிபர். சாகுல் ஹமீது அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற பல நூல்கள் வெளிவர இறைவன் அருள் புரிவானாக.

செ.திவான்

கல்வித் தந்தை சுலைமான் இல்லம்
106 F 4A திருவனந்தபுரம் சாலை
பாளையங்கோட்டை 627 002.
0462 - 572665

# பரலி சு. நெல்லையப்பர்

*பார் அதிரக் கவிபாடி, புத்துலகைச் சமைத்திட்ட பாரதிப்புலவன் புதுச்சேரியிலிருந்து 1915 ஜூலை 19 ஆம் நாள் தன்னை விட ஏழு வயது சிறியவரான பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய பிரசித்தி பெற்ற கடிதத்தின் சில வரிகள் இதோ:*

*எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையைப் பராசக்தி நன்கு காத்திடுக.*

*தம்பி, - மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக் கமலத்திலே பேரறிவாகிய உன் ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன். தம்பி ...... நீ வாழ்க.*

*உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தபடியால் உடனே 'ஜவாப்' எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாசத்துக்கு 'நாட்டுப்பாட்டுக்கள்' அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகைகளிலும், ஞானபானுவிலும், பிரசுரம் செய்வித்திடுக. ''புதுமைப்பெண்'' என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டுபிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி - உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.*

*உனதன்புள்ள*
*பாரதி ★*

*தேசியக் கவி பாரதி பணம் அனுப்பச் சொல்லி கடிதம் எழுதிய தம்பி தான் பரலி சு. நெல்லையப்பர்.*

## பரலிக் கோட்டை

*திருநெல்வேலிக்கு எட்டுமைல் தொலைவிலுள்ளது பரலிக்கோட்டை.*

---

*★ நவசக்தி உதவியாசிரியர் சக்திதாஸன் சுப்பிரமணியன், பாரதி லீலை, சென்னை, 1938, பக். 69-72.*

இந்த ஊரின் முதல் மூன்று எழுத்துக்களே நெல்லையப்பரின் பெயருக்கு முன்னால் கட்டியங்கூறிக் கொண்டிருக்கின்றன.

சுப்பிரமணியபிள்ளை, முத்துலட்சுமி அம்மையார் தம்பதிகளுக்கு, 18.9.1889 இல் (விரோதி ஆண்டு புரட்டாசித் திங்கள் ஐந்தாம் நாள்) பிறந்தவர் பரலி சு. நெல்லையப்பர். ★

## பரலி சு. சண்முகசுந்தரம் பிள்ளை

தூத்துக்குடியில் தேசபக்தச் செம்மல் வ.உ.சி யைச் சந்திக்கச் சென்றவர் வீர முரசு சுப்பிரமணிய சிவா. இரு பெரும் தேசத் தலைவர்களைச் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்தவர் பரலி சு. நெல்லையப்பரின் மூத்த சகோதரர் பரலி சு. சண்முகசுந்தரம்பிள்ளை ஆவார். ★★

## பரலி சு. குழந்தைவேலன்

லோகோபகாரி என்ற பத்திரிகையை நடத்துவதில் பரலி சு.நெல்லையப்பருக்கு பெரிதும் உதவியாக இருந்தவர் பரலி சு. குழந்தைவேலன். ★★★

பரலி சு. நெல்லையப்பருக்கு பரலி சு. சண்முகசுந்தரம்பிள்ளை, பரலி சு. குழந்தை வேலன் என்ற இரு சகோதரர்கள் இருந்தனர்.

வ.உ.சி யின் வலக்கை போலிருந்தவர் பரலி சு. சண்முகசுந்தரம் பிள்ளை.

வ.உ.சி யின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் குமாஸ்தாவாக வேலை பார்த்தவர் பரலி சு. நெல்லையப்பர்.

இவ்வாறு பரலி சு. நெல்லையப்பரின் குடும்பம் முழுவதுமே நாட்டுக்காக உழைத்த வ.உ.சி.யோடு இணைந்து செயல்பட்டது.

## விடுதலை நாள்

தேசியத்தலைவர் விபின் சந்திரபாலரின் விடுதலை தினத்தை நெல்லையில் வெள்ளையர் எதிர்ப்பு விழாவாக நடத்தினார் வ.உ.சி.

---

★ வெ. சாமிநாதசர்மா, நான் கண்ட நால்வர், புதுக்கோட்டை, 1959, பக்.84.

★★ மேலது, பக். 208.

★★★ பரலி சு. நெல்லையப்பர், வ.உ.சிதம்பரம்பிள்ளை சரித்திரம், சென்னை, 1944, பக். 5.

நெல்லையில் 9.3.1908 இல் நடைபெற்ற எழுச்சிமிகு ஊர்வலத்தில் பங்கேற்றவர் பரலி சு. நெல்லையப்பர்.

தூத்துக்குடியில் வெள்ளையர் ஆதிக்கத்தை ஒடுக்கிட வ.உ.சி வெள்ளையர்களின் பட்லர்களின் வேலை நிறுத்தத்திற்கும் காரணமானார். இதில் பரலி சு. நெல்லையப்பரின் பங்களிப்பும் இருந்தது. ★

## சிறைவாசம்

திருநெல்வேலி சுயராஜ்யத் தினக் கொண்டாட்டத்தை கலவரம் என குற்றஞ்சுமத்தி வ.உ.சி. சுப்பிரமணிய சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோர் மீது அரசு வழக்குத் தொடுத்தது. 12.3.1908 இல் வ.உ.சி யும், சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப் படாமலேயே சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டார்கள். அந்த வேளையில் சிறைத்தண்டனையை எதிர்த்து துண்டுச்சீட்டுக்களை அச்சடித்து பொது மக்களிடையே வழங்கியவர் பரலி சு. நெல்லையப்பர். ★★ அதன் காரணமாக அரசின் அடக்குமுறைகளைச் சந்தித்து சிறையேகியவர் பரலி சு. நெல்லையப்பர்.

## புதுவையிலே பணி

தனக்கு கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் பயன்படுத்தி சுதந்திரப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பரலி சு. நெல்லையப்பர், விடுதலைப் போராட்ட வீரர்களின் படைத்தளமாகத் திகழ்ந்த புதுவைக்குச் சென்று விடுதலைப் போராட்ட வேள்வியினைத் தொடர்ந்தார்.

நெல்லை மாவட்ட ஆக்டிங் கலெக்டர் ஆஷ், வீரவாஞ்சியால் 17.6.1911 இல் மணியாச்சி ஜங்ஷனில் சுட்டுக்கொல்லப்படுவதற்கு பின்னணியில் காரணமான பலருள் எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியும் ஒருவர். அவர்களுடன் இணைந்து புதுவையிலே பணியாற்றியவர் பரலி சு.நெல்லையப்பர்.

---

★ ரா.அ. பத்மநாபன், சித்திரபாரதி, பாரதியார் நூற்றாண்டுவிழாவெளியீடு, சென்னை, 1982, பக். 126.

★★ சைவநெறி இந்திய சுதந்திர பொன்விழாமலர் 1998, தியாகத்தின் இமயம், ஐயா, பரலி சு. நெல்லையப்பர், நமச்சிவாயம் இராமகிருஷ்ணன் பக்.45

வ.உ.சி. கோவை கொடுஞ்சிறையில் வாடியபோது அவர்களுக்கு தொண்டு புரிந்தவர் பரலி சு. நெல்லையப்பர். இதை அவரது வரிகளிலேயே காணுவோம்.

''பிள்ளையவர்கள் கோயம்புத்தூர்ச் சிறைக்கோட்டத்தில் இருந்த பொழுது எனது விருப்பத்திற்கு இணங்கி தமது சுயசரித்திரத்தைச் சுமார் மூவாயிரம் அடிகள் கொண்ட அகவற்பாவாக எழுதி அனுப்பினார்கள்.

நானும் எனது தமையனார் பரலி சு. சண்முகசுந்தரம்பிள்ளையும், தம்பி பரலி சு. குழந்தைவேலனும் இளமையிலேயே பிள்ளையவர்களின் (வ.உ.சி அவர்களின்) குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக யிருந்ததுடன் அவர்கள் நடத்திய சுதேசிக் கப்பல் கம்பெனியிலும் பலவகைத் தொண்டுகள் புரியும் பாக்கியம் பெற்றிருந்தோம்.

## கோவையில் வ.உ.சி க்கு உதவி

1908 ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் (வ.உ.சி) திருநெல்வேலி பாளையங்கோட்டைச் சிறைக் கோட்டத்தில் இருந்தபொழுது, அவர்களுடன் சிலகாலம் அங்கு வசிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்ததுடன் அவர்கள் பின்னர் கோயம்புத்தூர் சிறைக்குள்ளேயிருந்த பொழுது, நான் அதற்கு வெளியே சுமார் ஓர் ஆண்டு தங்கியிருந்து அவர்களுக்கு வேண்டிய திருப்பணி புரியும் பாக்கியமும் பெற்றிருந்தேன்.''

## பாரதியும் நெல்லையப்பரும்

'இந்த ஆசிரியரின் பாடல்களை இவர் காலத்திற்குப் பின்பும் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் படித்து களிப்படையும் காட்சியை நான் இப்பொழுதே காண்கிறேன்' என்று பாரதி பற்றி அப்பொழுதே கூறியவர் பரலி சு. நெல்லையப்பர்.

பாரதியாரின் காலத்திலேயே 1917 இல் பாரதியாரின் கவிதைகளைத் தொகுத்து 'நாட்டுப்பாட்டு' எனும் நூலாக வெளியிட்டவர் பரலி சு.நெல்லையப்பர்.

## பாரதி பாடல்களை முதலில் வெளியிட்டவர்

'தேசிய கீதங்கள்' என்று பெயரிட்டு விற்றால் பாரதி கவிதைகளை வெள்ளை அரசாங்கம் தடுத்துவிடும் என்று எண்ணிய நெல்லையப்பர்

'நாட்டுப்பாட்டு' என்று பெயர் கொடுத்து வெளியிட்டார். அரசாங்கம் புத்தகத்தில் என்னென்ன கவிதைகள் வெளிவரும் என்று பரலி சு.நெல்லையப்பரிடம் கேட்டது. அவர்களிடம் சொல்லி அனுமதி பெற்ற கவிதைகள் தவிர, அனுமதி பெறாத சில பாடல்களையும் தனியாகவும் அச்சடித்து நூலில் ரகசியமாய்ச் சேர்த்து விற்றவர் பரலி சு. நெல்லையப்பர். பாரதியாரின் கண்ணன் பாட்டு (1917) நாட்டுப்பாட்டு (1917) பாப்பாபாட்டு (1917) முரசு (1917) ஆகியனவற்றை முதன் முதலில் வெளியிட்ட பெருமை பரலி சு. நெல்லையப்பரையே சாரும்.

## பாரதியின் உடலைச் சுமந்தவர்

11.9.1921 இல் பாரதியார் உயிர் நீத்த வேளையில், அவரது உடலை மயானத்திற்கு எடுத்துச் சென்றவர்கள் துரைசாமி ஐயர், அரிகர சர்மா, சர்க்கரைசெட்டியார், சுரேந்திரநாத் ஆர்யா, திருமலாசாரியா ஆகியோருடன் பரலி சு. நெல்லையப்பரும் ஒருவர்.★

பாரதியின் புகழ் பாக்களைச் சுமந்ததுடன், பாரதியின் பூதவுடலையும் சுமந்து சென்றவர் பரலி. சு. நெல்லையப்பர்.

## பத்திரிகைத் துறையில்

'லோகோபகாரி' 'பாரதி' 'நாரதா' 'திராவிடப் பத்திரிகை' 'திரு.வி.க.வின் தேசபக்தன் ஆகிய அக்காலத்திய பத்திரிகைகளில் பரலி சு. நெல்லையப்பர் பணிபுரிந்துள்ளார். இவரது பத்திரிகைப் பணி குறித்து திரு.வி.க.வின் வரிகள் இதோ:

'குலோமே ஹமீத், பரலி. நெல்லையப்பர், இராஜகோபால், நடேசன் ஆகியவர் 'தேசபக்தனில் பின்னே சேர்ந்தவர். இவர்களில் சிலர் தனித்தனிப் பத்திரிகை நடத்துவோராயினர். பத்திரிகையாசிரியத் தொழிலே அவரது வாழ்க்கையாகியது'★★ பரலி சு. நெல்லையப்பரின் பத்திரிகைப் பணி பற்றிய செய்திகள் இதோ:

---

★ ந. சோமயாஜுலு, நெல்லை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு, நெல்லை 1977, கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பரலி சு. நெல்லையப்பர் கட்டுரையில் பக். 118.

★★ திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், சென்னை, 1982, பக். 218.

மெட்ரிகுலேஷன் வரை படித்த பரலி.சு. நெல்லையப்பர் திருமணம் செய்து கொள்ளாமலே தமது வாழ்க்கையை நாட்டுப்பணிக்கும், இதழியல் பணிக்கும், தமிழ்ப்பணிக்கும் அமைத்துக் கொண்டவர்.

## தேசபக்தன்

பாரதியாரின் 'இந்தியா' 'விஜயா' 'சூரியோதயம்' 'கர்மயோகி' முதலான தேசிய இதழ்களில் பங்கேற்பும் பயிற்சியும் பெற்றவர் பரலி.சு.நெல்லையப்பர்.

சென்னையில் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலரின் பாரதி நாளிதழிலும் (1916) திரு.வி.க.வின் தேசபக்தனிலும் (1917) பணியாற்றியவர் பரலி. சு. நெல்லையப்பர்.

1921இல் தேசபக்தன் ஆசிரியர் வ.வே.சு. அய்யர் சிறை செய்யப்பட்ட வேளையில் பரலி. சு. நெல்லையப்பர் 'தேசபக்தனில் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

## வடிவேலு செட்டியார்

'இலக்கண இலக்கிய வேதாந்த தருக்க போதகாசிரியர் கோ. வடிவேலு செட்டியார். 1915இல் நடத்திய லோகோபகாரியில் பரலி.சு.நெல்லையப்பர் துணையாசிரியராகப் பணியாற்றினார். அதன்பின்னர் பத்திரிகை நின்று விடும் அவலநிலை ஏற்பட்டது. பின்னர் அதைத்தானே நடத்துவதாக பரலி.சு.நெல்லையப்பர் கேட்டுக் கொண்டார். அதற்கு வடிவேலு செட்டியாரும் இசைவு தந்ததை, ''என் குருநாதர் நெல்லையப்பர்'' என்ற கட்டுரையில் கலைமாமணி நாரணதுரைக்கண்ணன் தெரிவித்துள்ளார். (அமரர் தியாகி பரலி. சு. நெல்லையப்பர் சிலை திறப்புவிழா நினைவு மலர் 1998)

1922லிருந்து 1941 வரையிலும், 1943லிருந்து 1948 வரையிலும், பரலி சு.நெல்லையப்பர் 'லோகோபகாரி' இதழை நடத்தி வந்தார் என்று ஆய்வாளர் அறிஞர் பெ.சு.மணி தெரிவித்துள்ளார். ★

---

★ விடுதலைப்போரில் தமிழ் இதழ்கள், சென்னை, 1998, பக். 347

## ‘பாரி’ யெனும் புனைப்பெயர்

*சங்ககாலக் கடையெழு வள்ளல்களில் ஒருவரான குறுநில மன்னன் 'பாரி'யின் பெயரைப் புனைப் பெயராகக் கொண்டு நெல்லையப்பர் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார்.*

*'மண்ணெண்ணெய் விளக்கை உடைத்தெறியுங்கள் திருவிளக்கேற்றித் தெய்வந்தொழுங்கள்' என்றும் மண்ணெண்ணெய் விளக்குகள் கண்களுக்குத் திங்கு பயப்பன. நமது பண்பாட்டுத் திருவிளக்கொளிக்கு நிகரானதுஅல்ல' என்று பரலி. சு. நெல்லையப்பர் எழுதினார்.*

*'கைகுத்தல் அரிசியின் சிறப்பைப் பற்றி நான்கு மாதங்களுக்கு ஒருமுறை தான் எழுதிய ஒரே கட்டுரையை மாறி மாறிப் பிரசுரம் செய்தவர் பரலி.சு.நெல்லையப்பர்.*

## தமிழறிஞர்களின் தொடர்பு

*கோ. வடிவேலு செட்டியார், எம்.எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார், ரா.பி. சேதுப்பிள்ளை, வ.வே.சு.ஐயர், கவியோகி சுத்தானந்தபாரதி, கா. சுப்பிரமணியபிள்ளை, ஆகியோரிடம் தொடர்பு கொண்டிருந்த பரலி சு. நெல்லையப்பர் அவர்களது தமிழ் வளர்ச்சி குறித்த கட்டுரைகளை தமது 'லோகோபகாரி'யில் பிரசுரஞ் செய்தார்.*

## நன்கு மதிப்பு

*'தமிழ்ப் பத்திரிகை நடத்தும் தொழிலில் ஸ்ரீப.சு. நெல்லையப்பபிள்ளை நல்ல திறமையுடையவர் என்பதை நானறிவேன். இவரை உதவியாகக் கொண்டு நடத்தப்படும் பத்திரிகையை ஜனங்கள் மிகவும் ஆதரிப்பார்களாதலால், அதற்கு நல்ல புகழும் லாபமும் உண்டாகுமென்பது என்னுடைய நம்பிக்கை' என்று பாரதி தனது கைப்பட 'நல்கு மதிப்பு' எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் பரலி. சு. நெல்லையப்பரைப் புகழ்ந்து ரைத்துள்ளார்.*

---

★ *அரவிந்தரும் அவரது ஆசிரமும், புதுச்சேரி, ச. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு, 1979, பக். 1, 38*

## அரவிந்தரும் நெல்லையப்பரும்

கல்கத்தாவில் 1872 ஆகஸ்ட் 15 இல் பிறந்தவர் புகழ் பெற்ற தேசியத் தலைவர் அரவிந்தர். பரோடா சமஸ்தான அலுவலிலிருந்து வங்காள அரசியலில் ஈடுபட்டார். வந்தே மாதரம் பத்திரிகை நடத்தினார். அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் சேர்க்கப்பட்டார். இராஜதுரோக குற்றஞ் சுமத்தப் பட்டது. ஒரு வருட விசாரணைக் கைதியாக இருந்த அரவிந்தர் 1910 பிப்ரவரியில் சந்திரநாகூர் சென்றார். அங்கிருந்து உத்தரபாராவைச் சேர்ந்த வாலிபப் புரட்சியாளர் சிலர் ஓட்டிய படகொன்றில் கல்கத்தா சென்றார். அங்கே தூய்ப்ளேக்ஸ் என்ற கப்பலில் ஏறி 1910 ஏப்ரல் 4இல் புதுச்சேரி அடைந்தார்.★ அங்கு அவரை வரவேற்றவர்களில் பரலி.சு. நெல்லையப்பர் ஒருவராவார். இது குறித்த விவரம் இதோ:

''செந்தமிழ்ப் புதுவையில் இந்த தெய்வீக புருஷனை வரவேற்கும் பேறு கவி சுப்ரமணிய பாரதி, ஸ்ரீநிவாச்சாரியார், வ. ராமசாமி ஐயங்கார், பரலி.சு.நெல்லையப்பர் முதலிய தேசபக்தர்களுக்கு கிடைத்தது. கப்பலிலிருந்து புதுச்சேரிக்கடல் பாலத்தில் பகல் ஒரு மணி வெயிலில் நடந்து வந்த மகான் அரவிந்தர் தலை மீது குடை தாங்கி வரும் பேறு அப்பொழுது இளைஞராயிருந்த பரலி சு. நெல்லையப்பருக்கு கிடைத்தது. அதனை பரலி. சு. நெல்லையப்பர் எப்பொழுதும் பெருமையாகச் சொல்லிக் கொள்வது வழக்கம்.★

தேசியத் தலைவர்கள் பலருடன் தொடர்பு கொண்ட தென்னாட்டு தீரர் பரலி சு. நெல்லையப்பர் என்பதனை அறிகிறபோது நமக்குப் பெருமிதமும் மகிழ்வும் பிறக்கிறதல்லவா!

## மொழிபெயர்ப்பு நூல்கள்

காந்தியடிகள் கூர்ஜா பாஷையில் இயற்றிய ''ஹிந்துஸ்வராஜ்'' என்ற நூலை 'மகாத்மா காந்தி இந்திய சுயராஜ்யம்' என்று மொழிபெயர்த்து 1920இல் வெளியிட்டவர் பரலி. சு. நெல்லையப்பபிள்ளை, 126 பக்கங்களைக் கொண்ட அந்த நூல் முக்கால் ரூபாய் விலையில் அப்போது வெளியாயிற்று.

---

★ பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள், லோகோபகாரி வெளியீடு, சென்னை, 1948, பக். 8.

பங்கிம் சந்திர சட்டர்ஜியின் ஜோடி மோதிரம், ராதாராணி ஆகிய கதைகளை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் பரலி. சு.நெல்லையப்பர். அவரது ராதாராணி மொழிபெயர்ப்பு நூல் 1938 இல் வெளிவந்தது.

ஐம்பது ஆண்டுகளில் பாடிய பாடல்களில் ஒரு பகுதியான பல பாடல்களை 'நெல்லைத் தென்றல்' எனும் நூலாக்கி 1966இல் 142 பக்கங்களில் வெளியிட்டவர் பரலி. சு. நெல்லையப்பர்.

## அரசியல் போர்க்களத்தில்

1932இல் சென்னை சிந்தாரிப்பேட்டையில் கள்ளுக்கடை, அந்நியத் துணிக்கடைகள் இவற்றின் முன்பு பரலி சு. நெல்லையப்பரின் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

1941இல் காந்தியடிகள் தொடங்கிய தனி நபர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஆந்திராவில் உள்ள பெல்லாரி சிறைச்சாலையில் ஆறு மாதம் சிறைத்தண்டனை பெற்று வாடியவர் பரலி.சு.நெல்லையப்பர்.

## அரசின் உதவி

எளிமையின் சிகரம், பண்பாட்டின் உறைவிடமாக தியாகத்தின் மறு உருவமாகத் திகழ்ந்த பரலி. சு. நெல்லையப்பரின் சேவையினைப் பாராட்டி தமிழக அரசு மாதந்தோறும் ரூ.250 வழங்கி வந்தது.

வறுமையின் நடுவில் வாழ்ந்து வந்த பரலி சு. நெல்லையப்பர் 28.3.1971இல் மறைந்தார்.

முன்னாள் வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. முனுஆதியின் முயற்சியால், குரோம்பேட்டையில் பரலி.சு.நெல்லையப்பபிள்ளையின் சிலை திறக்கப் பட்டது.

திருமணம் செய்து கொள்ளாமல், நாட்டிற்காகவே வாழ்ந்து மறைந்த பரலி சு. நெல்லையப்பரின் வளர்ப்புமகள் பூங்கோதை. அவரின் கணவர் மகாதேவன் இவர்கள் குரோம்பேட்டையில் வாழ்ந்து வருகிறார்கள்.

## வ.உ.சி.யும் பரலி.சு. நெல்லையப்பரும்

வ.உ.சி.யவர்கள் இராஜதுரோக குற்றஞ் சுமத்தப்பட்டு சிறையில் வாடிய காலத்தில் பாடிய தனிப்பாடல்கள் 1915 இல் வெளிவந்தது. அதில் சிரஞ்சீவி பரலி.சு. நெல்லையப்பபிள்ளைக்கு எழுதிய பாக்கள் என்று வ.உ.சி. 23 பாடல்கள் எழுதியுள்ளார். தனது குடும்பக் கடன்களைத் தீர்ப்பதற்குரிய வழி முறைகளை மிகுந்த உரிமையோடு அதில் வ.உ.சி. எழுதியிருக்கிறார்.

வ.உ.சியின் குடும்பத்தில் ஒருவராக, உற்ற தோழராக, உயிர் நண்பராக உடனிருந்து செயலாற்றியவர் பரலி.சு.நெல்லையப்பபிள்ளை அவர்கள் எழுதிய ''வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரத்தினைக்'' காண்போம்.

# பரலி சு. நெல்லையப்பரின்
# வ.உ.சிதம்பரம்பிள்ளை சரித்திரம்

## தோற்றம்

'திக் கெலாம் புகழுறும் திருநெல்வேலி' யென்று திருஞான சம்பந்தர் முற்காலத்தில் போற்றிப் புகழ்ந்த திருநெல்வேலி நாட்டைப் பிற்காலத்தில் உலகத்தார் போற்றுமாறு செய்த பல பெரியோர்களில் காலஞ்சென்ற திருவாளர் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் ஒருவர். திருநெல்வேலி நாட்டிற்கு மட்டுமன்றித் தென்னாடு முழுமைக்குமே அந்நாளில் அரசியல் துறையில் புதிய விழிப்பை உண்டு பண்ணிய பெருமைக்குரிய பெரியோர்களில் சிதம்பரம் பிள்ளை தலைசிறந்தவர்.

திருநெல்வேலி ஜில்லாவில், அக்காலத்தில் கும்பினி சர்க்காரை எதிர்த்துக் கலகம் செய்து பேர் பெற்ற கட்டபொம்மு நாயகன் அரசாண்ட பாஞ்சாலங் குறிச்சியைத் தனக்கு அருகே கொண்ட ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில், சைவ வேளாளர் குலத்தில், ஆங்கிரச ஆண்டு, ஆவணி மாதம், 22-ந் தேதி வியாழக் கிழமையன்று அஸ்த நட்சத்திரத்தில் (கி.பி. 1872, செப்டம்பர் மாதம் 5-ந்தேதி) சிதம்பரனார் பிறந்தார். அவர் தந்தையார் வ.உலகநாத பிள்ளை, எட்டையபுரம் ஸமஸ்தான வக்கீலாக விளங்கினார். முதலில், தான் பிறந்த ஊரிலும், பின்னர் தான் பேரும் புகழும் பெறுவதற்கு உரியதாகத் திகழ்ந்த தூத்துக்குடியிலும், அதற்குப்பின்னர் திருநெல்வேலியிலும் சிதம்பரனார் கல்வி கற்றார். இறுதியில் திரிசிரபுரத்தில் வக்கீல் உத்தியோகத்திற்குரிய கல்வியைக் கற்றார். அக்காலத்தில் ஆங்கிலத்தில் மெட்ரிக்குலேஷன் என்று வழங்கிய வகுப்பு வரை பயின்று அதில் தேர்ச்சி பெற்றார். 1895ம் ஆண்டு, அவர் வக்கீல் பரீட்சையில் தேறினர். இளமையில் நம் சிதம்பரம் பெற்றோர்க்கு அடங்காத முரட்டுப் பிள்ளையாகவே விளங்கினார்.

இளமையிலேயே பொதுநல ஊக்கத்துடன் விளங்கிய சிதம்பரனார், தம் தந்தையார் மேற்கொண்டிருந்த வக்கீல் உத்யோகத்தையே தாமும் நாடினார். வக்கீல் தொழிலில் பிள்ளையார் பொருள் வருவாய் ஒன்றை மட்டும் கருதாமல், உண்மையில் நியாயவாதியாகவே விளங்கினார். ஏழை மக்கள் வழக்கில் அவர் இலவசமாகவே வேலை செய்வார். அவர் வக்கீலாயிருந்த

பொழுது, பொது ஜனங்களைப் பல வழிகளில் வருத்திக் கொண்டிருந்த போக்கிரிகளும், போலீஸ் உத்யோகஸ்தரும், மற்ற உத்யோகஸ்தரும் தண்டனை பெறுமாறும், உத்யோகம் இழக்குமாறும் செய்திருக்கிறார். பிள்ளை வக்கீலா யிருந்த பொழுது, தண்டத்துறையில் (கிரிமினல்) திறமைசாலி யென்று பேர் பெற்றதுடன், நல்ல வருவாயும் பெற்று வந்தார். அதனால் அவர் தமிழ்ப் புலவர்களையும் ஏழை மக்களையும் பெரிதும் ஆதரித்து வந்தார். அவரிடம் ஆதரவு பெற்ற புலவர்கள் பலர், அவருக்குப் பாமாலை சூட்டி வாழ்த்தியிருக்கிறார்கள்.

## தமிழாராய்ச்சி

பிள்ளையார் வக்கீலாயிருந்த பொழுதே சைவ சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டதுடன், தமிழாராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். தமிழில் அவர் பெரிதும் விரும்பிக் கற்றுப் போற்றிய நூல், தெய்வத் தமிழ் மறையென்று வையம் போற்றும் திருக்குறள் ஆகும். சுவாமி வள்ளிநாயகம் என்ற பெரியாருடன் சேர்ந்து 'விவேகபாநு' என்ற வேதாந்த மாதப் பத்திரிகையைப் பிள்ளையார் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் நடத்தினார். 'விவேக பாநு' பின்னர் மதுரையிலும், தென்ஆப்ரிக்கா டர்பன் நகரிலும் சில ஆண்டுகள் நடந்து வந்து, பின்னர் மறைந்துவிட்டது.

## சுதேசி

வடக்கே, வங்காளத்தில் வங்காளப் பிரிவினையை ஒட்டி அந்நாளில் தோன்றிய சுதேசி இயக்கம் பிள்ளையார் உள்ளத்தைக் கவர்ந்தது. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருக்கூட்டத்தைச் சேர்ந்த அபேதானந்தர், ராமகிருஷ்ணானந்தர் போன்ற பெரியோர் பழக்கம், பிள்ளை உள்ளத்தில் இருந்த சுதேசி ஊக்கத்தை வளர்த்து விட்டது. அதன் பயனாகப் பிள்ளையார் தூத்துக்குடியில் **தருமசங்கம்** என்ற நெசவுச் சாலையையும் சுதேசிப் பண்டசாலை ஒன்றையும் நிறுவினார். காங்கிரஸ் இயக்கத்திலும் ஊக்கம் கொண்டு உழைக்கத் தொடங்கினார். சொற்பொழிவு வாயிலாகச் சுதேசிப் பிரச்சாரமும் செய்தார். தமிழ்நாட்டில் பொதுக் கூட்டம் கூடிப் பேசும் முறையைப் பிரபலப்படுத்தியவர் பிள்ளையே ஆவார். பிள்ளை திறமையான பேச்சாளரானமையால், அவர் பேச்சுக்கு நாட்டு மக்களிடம் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது.

★ Swadeshi Steam Navigation Company

நம் தேசத் தலைவர்களில் திலகர் பெருமானிடம் பிள்ளைக்கு 'தெய்வபக்தி' ஏற்பட்டிருந்தது. 1907-ம் ஆண்டு சூரத் நகரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு, ஸ்ரீமான் பிள்ளை இப்பொழுது புதுவையில் ஸ்ரீ அரவிந்தாசிரம வாசியா யிருக்கும் பெரியாரான சென்னை வக்கீல் எஸ். துரைசாமி ஐயர், காஞ்சி வரதாச்சாரியார், கவி சுப்பிரமணிய பாரதியார், வி.சர்க்கரைச் செட்டியார் முதலிய பல நண்பர்களுடன் சென்றார். அங்கே நடந்த ஒரு சமரச ஏற்பாட்டில், தென்னாட்டு மிதவாதிகள் கூட்டத்தின் தனிப் பிரதிநிதியாக, காலஞ்சென்ற சென்னைச் செல்வர் வி.கிருஷ்ண சுவாமி ஐயரையும், அமிதவாதிகள் என்ற தீவிர தேசபக்தர் திருக்கூட்டத்தின் பிரதிநிதியாக நமது சிதம்பரனாரையும் தேர்ந்தெடுத்தார்கள் என்றால் அவருக்கு அந்நாளில் ஏற்பட்டிருந்த பெருமதிப்பை சொல்ல வேண்டுமா?

## சுதேசிக் கப்பல் கம்பெனி

தூத்துக்குடி தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். தென்னாட்டிலிருந்து இலங்கைக்குச் செல்லும் பிரயாணிகளும் சரக்குகளும் அக்காலத்தில் தூத்துக்குடி வழியாகவே கப்பல் ஏறிச் செல்ல வேண்டும். எனவே, அது பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கியது. தென்னாட்டுச் சரக்குகளைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்து அனுப்பும் வியாபாரிகள் அங்கே மிகுதி. ஆனால், ஆங்கில (B.I.S.N. Coy.) கப்பல் கம்பெனியார் தூத்துக்குடிச் சுதேசி வியாபாரிகளை மதியாமல் தாங்கள் இட்டதே சட்டம் என்று காரியம் நடத்தி வந்தார்கள். சுதேசி வியாபாரிகள் பிள்ளையாரிடம் முறையிட்டார்கள். விதேசிக் கப்பல் கம்பெனி முதலாளிகளின் அநியாயங்களையும், சுதேசி வியாபாரிகளின் குறைகளையும் கண்ட பிள்ளை, தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றைத் தொடங்குவதென்று முடிவு செய்தார். தென்னாட்டு வியாபாரிகள், செல்வர்கள், தேசபக்தர்களின் ஆதரவு பெற்றுப் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கிவிட்டார். பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்ச ரூபாய் மூலதனத்துடன் சுதேசிக் கப்பல் கம்பெனி ★ 1905 -ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1906 -ம் ஆண்டு, அக்டோபர் மாதம், 16-ந் தேதி கம்பெனி பதிவு செய்யப்பட்டது.

முற்காலத்தில் கப்பலோட்டிக் கடாரத்தை வென்ற தமிழ்நாட்டில், ரோமாபுரிக்கு முத்தும் பவளமும் மிளகும் அனுப்பிய தமிழ்நாட்டில்,

சாவகத்திலும் காம்போஜத்திலும் சைவமும் வைணவமும் தமிழும் கமழுமாறு செய்த தமிழ்நாட்டில் பிற்காலத்தில் முதல் முதல் கப்பலோட்டிய பெருமை சிதம்பரனாரைச் சேர்ந்தது. பெருஞ் செல்வராயின்றிச் சிறிய வக்கீலாயிருந்த பிள்ளை, அக்காலத்தில் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவிய செயல் செயற்கரும் செயலென்றே சொல்ல வேண்டும். காலஞ்சென்ற பாலவநத்தம் ஜமீன்தாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான உயர் திருவாளர் பாண்டித்துரைத் தேவரும், தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் பெருஞ்செல்வராக விளங்கும் கோபாலசாமி நாயுடு குடும்பத்தாரும், தூத்துக்குடியில் பெருஞ்செல்வராக விளங்கும் சி.வ. குடும்பத்தாரும் வேறு சில செல்வர்களும் கப்பல் கம்பெனி ஏற்படுத்துவதில் பிள்ளைக்குப் பேராதரவு புரிந்தவர்கள். வந்தே மாதர முழக்கமும், சுதேசி இயக்கமும் உச்ச நிலையில் இருந்த அக்காலத்தில், தென்னாட்டு மக்கள் மட்டுமின்றி, பாரத தேசத்தின் பல பகுதிகளிலும் உள்ள மக்களும், அலைகடலுக்கப்பால் தொலைநாடுகளில் வாழும் இந்திய மக்களும் தேசபக்தி உணர்ச்சி மிகுந்தவர்களாய், சுதேசிக் கப்பல் கம்பெனியில் பங்கெடுத்துக் கொண்டு, அதற்குப் பேராதரவு புரிந்தார்கள். சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும், பல தாய்மார்கள் கூடச் சிதம்பரனார் மீது 'தெய்வபக்தி' கொண்டவர்களாய், தங்கள் வாழ்நாளில் சேர்த்து வைத்திருந்த பொருள்களைச் சுதேசிக் கப்பலுக்கென்று உதவினார்கள்.

## போட்டி

சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று தோன்றிய விஷயம், அதுவரை தனியரசு செலுத்தி வந்த விதேசிக் கப்பல் கம்பெனியாருக்கும் அவர்களை ஆதரித்துவந்த அதிகாரிகளுக்கும் பொறாமையையும் கோபத்தையும் விளைவித்தது. எனவே, குழந்தைப் பருவத்தில் இருந்த சுதேசிக் கப்பல் கம்பெனியை கொல்லுவதற்கு அவர்கள் வழி தேடினார்கள். விதேசிக் கம்பெனியார் ஜனங்களுக்கும் சரக்குகளுக்கும் ஏற்பட்டிருந்த கப்பல் கட்டணங்களைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்கினார்கள். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஐந்து ரூபாயாக ஏற்பட்டிருந்த (மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள்) கட்டணம், முக்கால் ரூபாய் வரை இறங்கியதென்றால் போட்டியின் கடுமையைச் சொல்லவேண்டுமா? நூற்றுக்கணக்கான கப்பல்களுடன், பல துறைமுகங்களில் பல ஆண்டுகள்

''தனிக்காட்டு ராஜா'' வாகக் கொள்ளை லாபம் திரட்டிவந்த விதேசிக் கப்பல் கம்பெனியார் இலவசமாகக்கூட ஆட்களை ஏற்றிச் செல்லலாம். ஆனால் இரண்டே கப்பல்களுடன், குழந்தைப்பருவத்தில் இருந்த சுதேசிக் கம்பெனிக்கு இந்தப் போட்டி மிகவும் கொடுமையாக இருந்தது. ஆயினும், சுதேசிக் கம்பெனி தைரியமாக வேலை செய்துவந்தது. இந்த நிலையில் கப்பல் கம்பெனிக்கு 'உயிராக விளங்கிய பிள்ளையை எவ்வாறாயினும் அடக்கிவிட வேண்டுமென்று எதிர்க்கட்சியாரும், அவர்களுக்கு ஆதரவாயிருந்த அதிகாரிகளும் முயன்றார்கள். அவருக்கு நயமாகவும் பயமாகவும் யோசனை கூறினார்கள்.

*அந்நாளில் பிள்ளை பிறரது நய வார்த்தைகளுக்கு இணங்கியிருந்தாரானால், அவர் மிகப் பெரிய செல்வராயிருத்தல் கூடும். அவருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட வறுமை ஏற்பட்டிராது. ஆனால் பிள்ளை உறுதியுடன் நின்றார்.*

## தொழிலாளர் கிளர்ச்சி

தூத்துக்குடியில், கோரல் மில்ஸ் என்ற ஹார்வி கம்பெனியாரின் பருத்தி ஆலையில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வேற்றுமை ஏற்பட்டது. அதன் பயனாகத் தென்னாட்டிலே முதல்முதலாகத் தூத்துக்குடியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதில் பிள்ளை தலையிட்டுச் சமரசம் செய்ய முயன்றார். வேலையற்றிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும் அவர்கள் குடும்பங்களையும் ஆதரிக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது. செல்வர்களிடமும் ஏனைய பொது ஜனங்களிடமும் பொருள் சேர்த்து அவர்களுக்கு ஆதரவு புரிந்தார்.

## சுதேசிக் கிளர்ச்சியின் உச்ச நிலை

அந்நாளில் தூத்துக்குடியில் சுதேசி உணர்ச்சி உச்ச நிலையில் இருந்தது. சுதேசி இயக்கத்திற்கு விரோதமாக இருந்த மனிதர்களைப் பொதுஜனங்கள் பகிஷ்காரம் செய்ய முற்பட்டார்கள். தூத்துக்குடியில் வக்கீலாயிருந்த பிராமண நண்பர் ஒருவருக்கு மருத்துவ சகோதரன் ஒருவன் ஷவரம் செய்து கொண்டிருந்த பொழுது, ஐயங்கார் சிதம்பரரின் சுதேசி ஊக்கத்தைப் பெரிதும் இகழ்ந்து பேசினார். ஷவரம் செய்து கொண்டிருந்த மருத்துவ சகோதரன் உடனே கத்தியை மடக்கிப் பெட்டியில் வைத்துவிட்டு ஐயங்காரை

அரைகுறை க்ஷவரத்தில் விட்டுவிட்டுப் போய் விட்டான். ஐயங்கார் சுவாமிகள் அன்று இரவே போலீஸ் காவலுடன் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்று, மறுநாள் காலையில் தமது திருப்பதி க்ஷவரக் கோலத்தை நீக்க வேண்டியதாயிற்று! வங்காளத்து நவமணிகளில் ஒருவரான காலஞ்சென்ற அஸ்வினி குமார தத்தரின் தலைமையில் பாரிசால் நகரம் சுதேசி ஊக்கத்தில் வங்காளத்திலேயே சிறந்து விளங்கியது. (சுதேசி ஊக்க மிகுதியால் பாரிசாலில் பரதேசித் துணி கிடைப்பது அரிதாய் விட்டது. அக்காலத்தில் பாரிசாலில் இருந்த ஜில்லாக் கலெக்டருக்கு ஒரு கெஜம் மல் வேண்டியதாயிருந்தது. அஸ்வினி குமார தத்தர் உத்தரவு கொடுத்த பின்னரே கலெக்டருக்கு ஒரு கஜம் பரதேசி மல் துணி கிடைத்ததாம்.) சிதம்பரம் பிள்ளை தலைமையில் சிறந்து விளங்கிய தூத்துக்குடியைத் தென்னாட்டு பாரிசால் என்று தேச மக்கள் போற்றினார்கள்.

## அடக்குமுறை

சிதம்பரம் பிள்ளையை எவ்வாறாயினும் அடக்கிவிட வேண்டுமென்று காலம் பார்த்திருந்த அக்கால அதிகாரிகள், அவரது பேச்சுகளால் தூத்துக்குடியில் குழப்பம் விளையுமென்று கூறி அவர் மீதும் அவரது நண்பர்களாகிய சுப்ரமணியம் சிவம், பத்மநாப ஐயங்கார் மீதும் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் முன் ஜாமீன் வழக்குத் தொடர்ந்தார்கள். அச்சமயத்தில் சென்னையில் இந்தியாப் பத்திரிகையை நடத்தி வந்த ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் வந்தார்.

சிதம்பரனார் வழக்கு திருநெல்வேலி ஜில்லாவில் மட்டுமல்ல, தென்னாட்டில் மட்டுமல்ல, காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை தேசமெங்குமே பெரியதோர் விழிப்பை உண்டுபண்ணியது. இந்த வழக்கு விசாரணைக்கென்றே தனி நீதிபதியாக ஏற்பட்ட பின்னே துரை, ★ பிள்ளைக்கு இரு குற்றங்களுக்காக இரு முறை ஆயுள் பரியந்தம் தீவாந்தர தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருஷம் தீவாந்தர தண்டனையும் (1908 ம் ஆண்டு ஜூலை மாதம்) விதித்தார். இந்த வழக்கு சுமார் நான்கு மாதம் நடந்தது. இதில் ஸ்ரீமான் சுப்ரமணிய சிவனார் கொடுத்த வாக்குமூலம் நமது தேசத்தின் விடுதலைச் சரித்திரத்தில் இடம் பெறுதற்குரியது. இந்தக் கொடிய தண்டனையால் நாடு முழுமையும் கலங்கியது. இந்தத் தண்டனை,

★ Mr. A.F. Pinhey, Additonal Sessions Judge

அக்காலத்தில் லண்டனில் இந்தியா மந்திரியாக விளங்கிய ஜான்மார்லியைக் கூட கலக்கியதாம். சிதம்பரபிள்ளைக்கு இரட்டைத் தீவாந்தர தண்டனை விதித்த ஜில்லா நீதிபதி பின்னே துரை, அடுத்தபடியாக (சென்னை ஐகோர்ட்) உயர்தர மன்ற நீதிபதியாக உயர்ந்து, சில காலம் பதவியில் இருந்தார். ஆனால், சில காலத்திற்குள் அவர் தமது பெரிய பதவியையும், ஐ.ஸி.எஸ். உத்தியோகத்தையும் அறவே விட்டுவிட்டுத் தாய் நாடு செல்ல நேர்ந்தது. அதற்குக் காரணம், சிதம்பரம் பிள்ளை விஷயத்தில் பின்னே துரை மேற்கொண்ட கொடிய நீதி முறையைப் பற்றி இந்தியா மந்திரி கொண்ட வெறுப்பேயென்று ஆங்கில அரசாங்கத்தின் ''மூலஸ்தான'' விவகாரங்களை அறிந்தவர்கள் அந்தநாளில் சொல்லிக்கொண்டார்கள்.

பின்னே துரையின் அநியாயத் தீர்ப்பை மாற்றுமாறு ஐக்கோர்ட்டிற்கு அப்பீல் செய்யப்பட்டது. பிள்ளையவர்கள் வழக்குச் செலவுக்காகப் பொருளுதவி நாடி அவரது மனைவியார் செய்த விண்ணப்பத்திற்கு இணங்கித் தேசத்தார் பேராதரவு புரிந்தனர். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களேயன்றி, இலங்கை, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் குடியேறி வாழும் தமிழர்களும், பாரததேசத்தில் வாழும் மக்களேயன்றி, பூலோகத்தின் பல பகுதிகளிலும் வாழும் இந்திய மக்களும் ஆதரவு புரிந்தார்கள்.

## சிறை வாசம்

சிதம்பரம் பிள்ளைக்கு ஏற்பட்ட ஆயுள் பரியந்தம் தீவாந்தர தண்டனையை ஆறு ஆண்டுச் சிறைவாசமாக ஐக்கோர்ட்டார் குறைத்துள்ளார்கள். நன்னடத்தைக் கழிவு, அரசாங்க வஜா முதலியன கழித்துப் பிள்ளை சுமார் நாலரை ஆண்டுகள் சிறைவாசம் செய்தார். முதலில் கோயம்புத்தூர்ச் சிறையிலும், பின்னர் மலையாளத்தில் உள்ள கண்ணனூர்ச் சிறையிலும் பிள்ளை தமது சிறை வாசத்தைக் கழித்தார்.

கோவைச் சிறையில் அரசியற் கைதியாக இருந்து மாடுபோலச் செக்கிழுக்கும் பெருமை முதல் முதலாகச் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கே கிடைத்தது. பின்னர், சுமார் பதினாறு ஆண்டுகள் கழித்து அதே சிறைக் கோட்டத்தில் அந்தப் பெருமையை அடைந்தவர் சேலம் செல்வரான ஸ்ரீமான் எம்.ஜி. வாசுதேவய்யா ஆவார். கல்வியறிஞரும் தேச பக்தருமான திருவாளர் பிள்ளைக்குச் செக்கிழுக்கும் வேலையைக் கொடுத்த செய்தியை அறிந்த தேச

பக்தர்கள் கொதிப்படைந்தார்கள். பிள்ளையார் மீது ஆதியில் அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தது பற்றிக் கொதிப்படைந்த திருநெல்வேலி மக்கள் கலகம் விளைவித்தது போலவே, கோயம்புத்தூர்ச் சிறையில் அதிகாரிகள் பிள்ளையையும் மற்றவர்களையும் கொடுமையாக நடத்தியது பற்றிக் கொதிப்படைந்த கைதிகள் கலகம் விளைவித்தார்கள். இந்தக் கலகத்தை யொட்டி ஏற்பட்ட வழக்கில், திருவாளர் பிள்ளை சிறைக்கோலத்துடன் சென்று கோவை ஜில்லா நீதி ஸ்தலத்தில் கொடுத்த சாட்சியம் குறிப்பிடத் தகுந்தது.

திருவாளர் பிள்ளை சிறைவாசம் செய்ய நேர்ந்த காரணத்தால் தென்னாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளுக்கெல்லாம் நல்ல காலம் பிறந்தது. சிறைக் கைதிகளுக்கு வேலை கொடுக்கும் முறையிலும் உணவு கொடுக்கும் முறையிலும் சீர்திருத்தம் ஏற்படுமாறு காலஞ்சென்ற சென்னைச் சட்டசபை அங்கத்தினர் குத்தி கேசவப் பிள்ளை சட்டசபை வாயிலாகப் பெரிதும் போராடினார். காட்டிலாகா சூழல்களையும், சிறைச்சாலை சூழல்களையும் ஒழிப்பதிலேயே அவர் நாளெல்லாம் உழைத்து வந்தார். அந்தக் காரணத்ததால், கேசவப் பிள்ளை ஒன்று காட்டில் இருப்பார், அல்லது சிறையில் இருப்பார் என்று நண்பர்களும் அதிகாரிகளும் விகடமாகக் கூறுவது உண்டு.

## தமிழ்த் தொண்டு

தேசத்தொண்டு காரணமாகச் சிறைக் கோட்டம் புகுந்த சிதம்பரம் பிள்ளை, சிறைக் கோட்டத்தில் ஓய்ந்த நேரங்களில் தாம் இளமை முதலே ஆர்வம் கொண்டிருந்த தமிழ்த் தொண்டில் சித்தம் செலுத்தி வந்தார். ஆங்கில நாட்டு ஞானியான ஜேம்ஸ் ஆலன் என்பார் இயற்றிய சில அரிய நூல்களை **மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம்** என்ற பேர்களுடன் மொழி பெயர்த்தார். வேறு சில தமிழ் நூல்களையும் இயற்றினார். இவற்றுள், மனம்போல வாழ்வு பிள்ளையவர்கள் சிறையில் இருந்த பொழுதே, ''இந்தப் புஸ்தகத்தின் காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும் சுதேசியம்'' என்ற குறிப்புடன் வெளியாயிற்று. மற்ற நூல்களைப் பிள்ளையவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் வெளியிட்டார். பொதுமறையான திருக்குறளை நன்றாக ஆராய்ச்சி செய்வதற்குரிய தருணம் அவருக்குச் சிறைக்கோட்டத்தில் கிடைத்தது.

திருக்குறள் மீது சிதம்பரனாருக்கிருந்த ஆர்வம் சொல்லும் தரத்தன்று. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் பாயிரத்தோடு படியாத ஆண் மகனோ பெண் மகளோ தமிழ்நாட்டில் இருத்தல் ஆகாதென்றும், தமிழ் வேதமான திருக்குறளைப் படியாத தமிழ் மக்கள் தமிழ் மக்கள் ஆகார் என்றும் பிள்ளையவர்கள் அழுத்தமாகக் கூறுவது வழக்கம்.

## விடுதலை

சுமார் நாலரை ஆண்டுகள் சிறைக்கோட்டத்தில் இருந்த பிள்ளை 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விடுதலை அடைந்தார். விடுதலை அடைந்தவுடன் பிள்ளை, குடும்பத்துடன் நேரே சென்னைக்கு வந்தார். சென்னை நகரத்திற்கு நடுநாயகமாக விளங்கும் சிந்தாத்திரிப்பேட்டையில் அருணாசல நாயகன் வீதியில் சுமார் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். பின்னர் சிலகாலம் திருமயிலையிலும், பிரம்பூரிலும் வாழ்ந்திருந்தார். பிள்ளை விடுதலை அடைந்து வந்தபொழுது, சென்னையிலுள்ள தலைவர்களில் பலரும் அவரைத் 'தீண்டாதாரா'கவே கருதினார்கள். திலகர் பெருமான் தமது சுயராஜ்ய நிதியிலிருந்து மாதந்தோறும் அனுப்பி வந்த ஐம்பது ரூபாயே அவருக்குப் பெரிய ஆதரவாயிருந்தது. பிரம்பூரில் இருந்த பொழுது பிள்ளை தமது குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் கூடச் செய்து பார்த்தார். சில காலம் தமிழ்ப்பத்திரிகைகளில் ஆசிரியராக்வும் இருந்தார்.

பிள்ளை சென்னையில் வாழ்ந்து வந்த பொழுது பலருக்குத் தமிழ்க் கல்வி பயிற்றி வந்தார். பிள்ளையாரிடம் திருக்குறள் பயின்றவர்களில், இப்பொழுது சிதம்பரம் நந்தனார் மடத்துத் தலைவராக விளங்கும் சகஜானந்த சுவாமியாரையும், லோகோபகாரி பத்திராசிரியராயிருந்த பரலி சு.நெல்லையப்பரையும் குறிப்பிடலாம். பிள்ளை சென்னையை அடுத்த பிரம்பூரில் இருந்தபொழுது, அங்கு வாழ்ந்து வந்த பெருந் தமிழறிஞரான திருமணம் செல்வகேசவராய முதலியாருடன் தமிழராய்ச்சி செய்துவந்தார். திருக்குறள் மணக்குடவர் உரையை வெளியிட்டதுடன், திருக்குறளுக்குத் தாமே புதிய உரை ஒன்றையும் இயற்றி வெளியிட்டார். பழந்தமிழ் இலக்கியமான தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திற்கு, உரையாசிரியர் இளம்பூரணர் எழுதிய கிடைத்தற்கரிய உரையையும் பிள்ளை பிற்காலத்தில் வெளியிட்டார். இன்னிலை என்ற பழந்தமிழ் நூலையும் அவர்

வெளியிட்டிருக்கிறார். சுதேசிக் கிளர்ச்சி தூத்துக்குடியில் மும்முரமாயிருந்த பொழுது பரலி-சு. ஷண்முகசுந்தரம் பிள்ளையைப் பத்திராசிரியராகக் கொண்டு, '**சுயராஜ்யம்**' என்ற பத்திரிகையைத் தொடங்க விரும்பி, அதற்குரிய முன்னேற்பாடுகளெல்லாம் செய்தார். முதல் இதழில் வெளியிடுவதற்காக எழுதிய உணர்ச்சி மிக்க தலையங்கக் கட்டுரை இன்னும் என் நினைவில் இருக்கிறது. ஆனால் பத்திரிகை தொடங்கு முன்பே அவர் மீது வழக்குத் தொடங்கிவிட்டதால் பத்திரிகை நின்று விட்டது. பிள்ளை சிறை சென்று மீண்ட பின், இந்தியாவின் நியாயம் உலகத்தாருக்கெல்லாம் விளங்குமாறு உலகத்திலுள்ள நாற்பது முக்கிய பாஷைகளில் பத்திரிகை வெளியிட வேண்டுமென்று கருதினார்! இக்கருத்து அக்கால நிலையில் முடியாமற் போயினும் அவரது பெருநோக்கம் கருதற் பாலது.

பிள்ளை சிறையிலிருந்து வெளிவந்த பொழுது அரசியல் உலகம் அமைதியுற்றிருந்தது. அப்பொழுது திலகர் சுயராஜ்ய சங்கம் தோன்றியது. அதில் பிள்ளை சேர்ந்து உழைத்தார். சென்னையில் தொழிலாளர் இயக்கத்திலும் சேர்ந்து வேலை செய்தார். சென்னையில் தொழிலாளர் மிகுதியாக வாழும் பெரம்பூர்ப் பட்டாளத்தில் '**சிதம்பரம் பிள்ளை** (அவென்யூ) சாலை' ஒன்றும், விளையாட்டு மைதானம் ஒன்றும் ஏற்பட்டிருப்பதே அதற்குச் சான்று. சில காலம் கோயம்புத்தூர்த் தொழிலாளர் சங்கத்திலும் அவர் வேலை செய்தார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பிள்ளைக்கு அதிக நம்பிக்கை இல்லை. ஆயினும் அந்த இயக்கத்திற்கு மாறாக அவர் எதுவும் செய்யவில்லை. அவர் தமக்குச் சரியென்று தோன்றிய வழிகளில் தேசத்தொண்டு செய்து வந்தார்.

## மீண்டும் வக்கீல்

வக்கீல் தொழிலில் விருப்பமற்றவரும், 'வக்கீலாய் நின்று வழிப்பறியே செய்கின்ற திக்கிலார்' என்று பாடியவருமான சிதம்பரம் பிள்ளை, தமது குடும்ப நிலை காரணமாக அதிகாரிகள் அனுமதிபெற்று 1922-ம் ஆண்டு மீண்டும் வக்கீல் ஆனார். தூத்துக்குடியிலும் பின்னர் கோவிற்பட்டியிலும், கடைசியாக மீண்டும் தூத்துக்குடியிலுமாக சுமார் பத்தாண்டுகள் வரை அவர் வக்கீல் தொழில் புரிந்தார். பிள்ளை கோவிற்பட்டியில் இருந்த பொழுது, ராஜத்துவேஷக் குற்றம்

சாட்டப்பட்டிருந்த ஸ்ரீமான்களான எம்.எஸ். சுப்ரமணியஐயர், என்.சோமயாஜுலு முதலிய இளந்தேசபக்தர்களுக்கு உண்டி, உடை அளித்து ஆதரித்ததுடன், அவர்களுக்காக நீதிஸ்தலத்தில் வலியத்தோன்றி வாதித்த செய்தியைத் தமிழ்நாட்டார் மறந்திருக்க மாட்டார்கள். பிள்ளை தூத்துக்குடியில் வக்கீலாயிருந்தபொழுது, ஊக்கமும் உழைப்பும் உருவெடுத்தது போல விளங்கிய அவருடைய மூத்த மகன் உலகநாதன் தனது இருபதாவதாண்டில் காலஞ்சென்றான். அதனால் அவர் குடும்பத்திற்குத் தீராத துயரமும் நஷ்டமும் விளைந்தன.

## இறுதி

பிள்ளை சிறந்த உடற்கட்டுடையவராயினும், ஐந்தாண்டு அநியாயச் சிறைவாசம் அவர் உடல்நலத்தைப் பெரிதும் கெடுத்துவிட்டது. சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர், வருவாயின்றி வறுமையில் வருந்த நேர்ந்தது. *1932*-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் *3*-ந் தேதி பிள்ளையின் அறுதாண்டு நிறைவு விழா நடந்தது. அதனையொட்டி, அவரிடம் தேசமக்களுக்குள்ள நன்றியறிதலுக்கு அறிகுறியாக அவருக்கு ஒரு பணப்பை அளிக்க வேண்டுமென்று டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலிய நண்பர்கள் முயன்றார்கள். அந்த நிதிக்குப் பல நண்பர்கள் மனமுவந்து பொருளுதவி புரிந்தார்களாயினும், அதற்குப் போதிய அளவு பொருள் சேரவில்லை. பிள்ளையின் தேசத்தொண்டைத் தற்காலத் தமிழ் மக்கள் மறந்து விட்டமையே அதற்குக் காரணம். பெரியோர்கள் இந்த உலகத்தில் இருக்கும் பொழுது அவர்களை ஏறிட்டுப் பாராமல், அவர்கள் இறந்த பின்னர், அவர்களைப் பற்றி வியந்தோதித் திருவிழாக் கொண்டாடும் வழக்கம் தற்காலத் தமிழ்நாட்டில் மிகுதியாயிருக்கிறது. எனவே, தேசத்திற்காகப் பலவித அரிய தியாகங்கள் செய்த சிதம்பரம் பிள்ளையும், கவி சுப்பிரமணிய பாரதியாரும் பிறகும் அவர்கள் வாழ்நாளில் வருந்த நேர்ந்தமை வியப்பாகாது. முதுமையும் நோயும் வறுமையும் வருத்த, பிள்ளை தாது ஆண்டு கார்த்திகை மாதம் நாலாம் தேதி (*18-11-36*) புதன்கிழமையன்று வறுமையும் சிறுமையுமற்ற பெரிய உலகம் புகுந்தார். பிள்ளையார் இவ்வுலக வாழ்வு நீத்தபொழுது அவருக்கு வயது அறுபத்தைந்தே.

## குண நலம்

சிதம்பரம் பிள்ளை தேசபக்தியில் சிறந்தவர். தியாக புத்தியில் உயர்ந்தவர். பால கங்காதர திலகர், லாலா லஜபதிராய், அஸ்வினி குமார தத்தர் முதலிய உத்தம தேச பக்தர்கள் திருக்கூட்டத்தில் அவர் சேர்தற்கு உரியவர். அவர் தமிழ் அன்பர்: தமிழ் அறிஞர்: பெருங் கவிஞரல்லராயினும், அவர் தமிழ்க் கவி. தமிழ் வளர்ப்பதை அவர் தமது வாழ்நாளில் பெருங் கடமையாகக் கொண்டிருந்தார். சைவத்தில் உறுதியான பற்றுக் கொண்டிருந்தார். சைவ சமயமும் சைவ உணவியக்கமும் வையத்திற்கு உய்வளிக்கத் தகுந்தன என்பது பிள்ளையின் கருத்து. ஆயினும் அவர் ஜாதி, சமய வேற்றுமையற்ற சமரசவாதி. அவர் அன்பிலும் ஜீவகாருண்யத்திலும் சிறந்து விளங்கினார். விருந்தோம்பல் என்ற சிறந்த குணம் அவரிடம் சிறந்து விளங்கியது. ஆதியில் வக்கீல் தொழில் செய்து வருவாய் மிகுந்து விளங்கிய காலத்திலும், பிற்காலத்தில் அவர் சிறையிலிருந்து வந்த பின்னர் வருவாய் குறைந்திருந்த காலத்திலும் பிள்ளை வீடு 'சத்திரம்' ஆகவே விளங்கியது. மேன்மக்களிடம் சிறந்து விளங்க வேண்டிய உயர் குணங்கள் பல அவரிடம் சிறந்து விளங்கின். பேரன்பும், பேரூக்கமும், பெருமைப்பும், பெருந்தியாகமும் கொண்டபெருந் தமிழராகப் பிள்ளையார் விளங்கினார். பெருந் தமிழர் திருக்கூட்டத்தில் அவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

நன்றியறிதல் என்ற சிறந்த குணம் பிள்ளையாரிடம் சிறந்து விளங்கியது. ஆதியில் சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கும் முயற்சியில் தம்முடன் உடனின்று உழைத்த தூத்துக்குடி வியாபாரிகளான காலஞ்சென்ற சித. ஆறுமுகம் பிள்ளையர்வகள் பேரை அவர் தம் இரண்டாவது புதல்வருக்கு இட்டார். பிள்ளையார் சிறைக்கோட்டத்தில் இருந்த பொழுதும், விடுதலை அடைந்த பின்னரும், அவருக்குப் பொருளுதவி புரிந்து வந்த தென்ஆப்பிரிக்கச் செல்வரான தில்லையாடி வேதியப்பிள்ளையென்ற நண்பரின் பேரைத் தம் இரண்டாவது புதல்விக்கு இட்டார். (வேதவல்லி யென்ற இப்புதல்வியும் அதன் தமக்கையான ஞானாம்பாளும் மண வாழ்க்கையில் வாழ்ந்திருந்து சில நன்மக்களைப் பெற்றுச் சில ஆண்டுகளுக்கு முன் இள வயதில் காலஞ்சென்றனர்.) பிள்ளையவர்கள் கோவைச் சிறைக் கோட்டத்தில் இருந்தபொழுது, அவருக்கு அரும்

பெருந்துணைவராக அமர்ந்த கோவைப் பெரியாரான திருவாளர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் பேரைத் தம் மூன்றாம் புதல்வருக்கு இட்டார். வக்கீலாயிருந்த பிள்ளையவர்கள் சிறைக்கோட்டம் சென்று வெளிவந்த பின், அரசியல் குற்றம் செய்தவர்களுக்கு வக்கீல் உத்யோகம் கிடைப்பது அரிதாயிருந்தது. பிள்ளையவர்கள் விரும்பிய காலத்து அவருக்குத் திரும்பவும் வக்கீல் உத்யோகம் கிடைக்குமாறு செய்த சென்னை ஐக்கோர்ட் நீதிபதி வாலிஸ் ★ துரையின் நினைவைப் போற்றுமாறு தமது கடைசிப் புதல்வருக்கு வாலீசுரன் என்று பேரிட்டார். பிள்ளை பெற்றுப் பேரிடுதல் என்பதைத் தமிழ்நாட்டார் பெருநன்றிக்கு அறிகுறியாகக் கூறுவர். பிள்ளையார் அக்கூற்றை மெய்ப்படுத்தினார்.

## நாட்டு மக்கள் நன்றி

சுதேசியென்றும், சுயராஜ்யம் என்றும் சொல்லவும் மக்கள் அஞ்சியிருந்த தென்னாட்டில், வந்தே மாதரம் என்று வாயால் சொல்லவும் அஞ்சியிருந்த தமிழ் நாட்டில் சுதேசி முழக்கமும் வந்தே மாதர முழக்கமும் செய்து சுயராஜ்ய உணர்ச்சியை எழுப்பிய பெருந்தலைவரான பிள்ளையவர்கள் விஷயத்தில் தமிழ் மக்கள் போதிய அளவு நன்றி காட்டவில்லையென்பது உண்மையே. பிள்ளையவர்களின் பெருந் தொண்டை அறிந்த முதியவர்கள் அதனை மறந்து விட்டார்கள். இளைஞர்கள் அதனை அறிய மாட்டார்கள். ஆயினும் பிள்ளையவர்களைத் தமிழ் நாட்டார் முற்றிலும் மறந்துவிடவில்லை. சென்னையில் பிள்ளையார் தொழிலாளர் நலத்திற்காக உழைத்ததை நினைவூட்டும் பொருட்டுப் பெரம்பூர்ப் பட்டாளத்தில் சிதம்பரம் பிள்ளை சாலையும் விளையாட்டு நிலையமும் ஏற்பட்டிருப்பதை முன்னரே கூறியிருக்கிறோம். சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியாரும் சில ஆண்டுகளுக்கு முன் பிள்ளையவர்கள் முக உருவச்சிலை (Bust) ஒன்றை நிறுவித் தாங்களும் அவரை மறந்து விடவில்லையென்பதைக் காட்டிக் கொண்டார்கள். வேலூர் நகரசபையார் தங்கள் சபை மண்டபத்திற்குச் சிதம்பரம்பிள்ளை மண்டபம் என்று பேரிட்டுச் சிறந்த முறையில் தங்கள் நன்றியை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் வேறு பல இடங்களிலும் சிதம்பரனார் பேரால் சங்கங்களும் வாசகசாலைகளும் புத்தகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

★ Sir John Wallis

ஆனால், பெரியோர்களுக்கு நன்றி காட்டுவதென்பது ஞாபகச் சின்னங்களில் அடங்கியிருக்கவில்லை. அப்பெரியார்களின் அரிய நோக்கங்களை அறிந்து, அவற்றில் ஊக்கம்கொண்டு உழைத்து, அவற்றை நிறைவேற்ற முயல்வதே அவர்களுக்கு உண்மையான முறையில் நன்றி காட்டுவதாகும். வீரத்தமிழராகவும், விடுதலை வீரராகவும் விளங்கிய சிதம்பரம் பிள்ளையின் நினைவைப் போற்ற விரும்பும் தமிழ் மக்கள் தேசம் பல துறைகளிலும் விடுதலை பெறுதற்குரிய நெறியில் உழைக்க வேண்டும். தமிழ்நாடும் தமிழ்மொழியும் தமிழ் நாகரிகமும் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுமாறு மனமொழி மெய்களால் தொண்டு புரிதல் வேண்டும். அதற்குரிய அறிவும் திறமையும் பூமிதேவியின் தலைப் பிள்ளையான தமிழ்ப் பிள்ளையிடம் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்பது தமிழ்ச் சிதம்பரம் பிள்ளையின் தளராத நம்பிக்கையாயிருந்தது. அவரது நம்பிக்கையை நாம் உண்மையாக்க முயல்வோமாக.

- வந்தே மாதரம்!

நல்லாண்மை யென்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

சிதம்பரம் பிள்ளை
திரு நாமம் வாழ்க.

வ.உ.சி.யுடனிருந்த பரலி. சு. நெல்லையப்பர் சற்று விரிவாகவே வ.உ.சி. வரலாற்றை எழுதி இருந்தால் இன்னும் பல செய்திகள் வ.உ.சி. குறித்து தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கக் கூடும். என்செய்ய! பரலி. சு. நெல்லையப்பர் எழுதிய வ.உ.சி. சரித்திரம் இவ்வளவு தான். அதுவும் காலகதியில் மறைந்து விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் திரும்பவும் இங்கு மறுபதிப்பு செய்யப் பட்டுள்ளது என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!.

செ.திவான்.

SNCL8080

வரலாற்று ஆய்வாளர்

**செ. திவான்** M.A., M.Phil., எழுதிய நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல....
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
(தமிழகஅரசு - மத்திய அரசு நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூல்)
5. நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர்முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி யின் அழகும் ஆரோக்கியமும்
9. வ.உ.சி யின் துன்பத்தின் கற்பனை
10. வ.உ.சி யின் அரசியல் பெருஞ்சொல்
11. வ.உ.சி யும் பெரியாரும்
12. தெற்கில் ஒலித்த தீன்குரல்
13. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
14. பாரதியும் காங்கிரசும்
15. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!
16. கூடங்குளம் அணுஉலையை மூடு!
17. உண்மையின் சவுக்கடி 18. குடை 19. சிந்தனைக்கு
20. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
21. குடைப்புரட்சி
22. கலைஞரை வென்ற வைகோ
23. வாகை சூடி வரும் வைகோ
24. வைகோவின் பொன்மொழிகள்
25. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
(ஆய்வுநூல்) (ஆசிரியரின் 25 வது நூல்) (விற்பனையில்)
524 பக்கங்கள்விலை ரூ.120
26. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
27. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள் (விற்பனையில்)
28. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்
29. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
30. இந்திய சுதந்திரப் போரில் இஸ்லாமியப் பக்கீர்கள் (1806) (அச்சில்)